**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**தேதி: 28.10.2025**

**OS. No.41/2010**

**வழக்கு சாட்சி PW.1– இலட்சுமி, க/பெ. பெருமாள்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

தாவா சொத்தான எனது அப்பா சொத்தை சரிபாகமாக பிரிக்கச்சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது அப்பாவிற்கு நான், ராஜாமணியம்மாள், தேகசிநாதன் ஆகியோர் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். இந்த வழக்கின் தாவா சொத்து பாகம் பிரிக்கப்பட்டு நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட எந்த சொத்தும் எனது அனுபவத்தில் இல்லை. பிரதிவாதிகள்தான் தாவாசொத்தின் மொத்த வருமானத்தையும், சொத்தையும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவாசொத்து பல இலட்சம் மதிப்புடைய சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பு விபரம் அதன் அனுபவ பாத்தியம் யாரிடம் உள்ளது என்ற விபரத்தை சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.10.28 16:59:50 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.